www.padippakam.com

# செய்திக்கோவை

நேரம் 11

ஆடி - 1985.

<u>வெளிச்சங்களே, உங்களிற்கு மரணமில்லை!</u>

1983 ஆடி மாத கலவரங்களின் போது, சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட தமிழீழப் போராளிகளிற்கு எமது வீரவணக்கங்களைச் செலுத்துகின்றோம்.



**புரட்சி வெல்வோம்! உயர்ச்சி கொள்வோம்!**

படிப்பகம்

www.padippakam.com


1/7/85

கிளிநொச்சியில் சங்கரப்பிள்ளை கிருஷ்ணசாமி என்பவரின் குடும்பம் இளைஞர் கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவி நான்கு பிள்ளைகள் உட்பட அனைவரும் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5/7/85

ஆயுதம் தாங்கிய 12 இளைஞர்கள் யாழ்-கஸ்தூரியார் வீதியில் உள்ள கந்தையா நகைக்கடையை கொள்ளையடித்துள்ளார்கள்.

6/7/85

போர்நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறுவதாகவும், பூட்டான் பேச்சுவார்த்தைக்கு முன்பதாக இந்திய அதிகாரிகளை சந்தித்துப் பேசவுள்ளதாக புதுடெல்கியில் வைத்து, பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், தமிழ மக்கள் விடுதலைக்கழக செயலதிபர், தோழர் உமா மகேஸ்வரன் கூறியுள்ளார்.

10/7/85

பூநகரி இராணுவமுகாமைச் சேர்ந்த 10 சிங்கள இராணுவத்தினர்கள், அருகில் உள்ள மருத்துவத்தாதி ஒருவரின் வீட்டுக்குச் சென்று, அங்கிருந்த பெண்ணை கற்பழிக்க முயன்ற சமயம், அப்பெண் தப்பியோடவே, அருகில் இருந்த வீடொன்றினுச் சென்று அங்கிருந்த குடும்பப்பெண்ணொருவரை கற்பழித்துள்ளனர்.

11/7/85

கொழும்பு கோட்டைக்கு அருகில் உள்ள, ஜனாதிபதி மாளிகைக்கு அருகாமையிலும், வேறு சில முக்கிய அலுவலகங்களுக்கு அருகாமையிலும், 50கிலோ, 75கிலோ நிறையான வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக பல தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பூங்காவிற்கு அருகில் இரண்டு வெடிகுண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து யாழ்நீதிமன்ற கட்டிடம் சிறிது பாதிக்கப்பட்டுள்ளது.

மாகாண மாவட்ட அளவில் அதிகாரப் பொறுப்புகள் வழங்கல் என்ற இலங்கைக் குழுவின் யோசனை, தமிழீழ விடுதலை ஸ்தாபனங்களினால் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் பிரபலவர்த்தகரின் மனைவி தெய்வகுமாரி வயது 25, மற்றும் அஜித் வயது 20, ஆகியோர் இனம் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள்.

13/7/85

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில், பிறமாவட்டத்தில் இருந்து பாரிய ஆயுதங்களுடன் வரும் சிங்களவர்கள், தமிழ் மக்களை விரட்டுவதாகவும், இது காரணமாக அங்கிருக்கும் தமிழ்மக்கள் மிகவும் பயந்த நிலையில் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

14/7/85

தமிழீழக்கோரிக்கையை கைவிட்டோ அல்லது ஆயுதங்களை கீழேவைத்துவிட்டோ தாம் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என்று தமது பொதுவான நிலையை பூட்டான் மகாநாட்டில் தமிழீழப்போராளிகளின் பிரதிநிதிகள் உணர்த்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பூட்டானில் ஒத்திவைக்கப்பட்ட பேச்சுவார்த்தையை மீண்டும் தொடக்க இலங்கை அரசிற்கு தமிழீழப்போராளிகளால் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்நிபந்தனைகளாவன:

1 இலங்கைத் தமிழர்களை தனித்தேசிய இனமாக அங்கீகரிக்கவேண்டும்.
2 தமிழர்கள் வாழும் பகுதிகளை வரையறுத்து அவற்றை அங்கீகரிக்கவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

3 சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தமிழீழத்திற்கு அங்கீகாரம் அளிக்கவேண்டும்.

4 இந்நாட்டை தங்கள் நாடாகக் கருதும் அனைத்துத் தமிழர்களுக்கும் முழுக்குடியுரிமையும், மற்றும் அடிப்படை உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

15/7/85

நாம் அதிகமாக எதையும் எதிர்பார்க்கவில்லை, உண்மையில் தற்போதைய அரசின் கீழ் எதனையும் நாம் எதிர்பார்க்க முடியாது, இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் தோழர் உமா மகேஸ்வரன், டெல்லியில் வைத்து பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், திம்புபேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதன் மூலம் கழகத்தை ஒரு அரசியல் சக்தியாக, சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கான முதற்படி என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் சுதந்திரத்தை பறிக்கக்கூடிய எந்தவொரு முடிவையும் இந்தியா ஏற்றுக் கொள்ளாது என பிரதமர் திரு ரஜீவ் காந்தி கூறியுள்ளார்.

16/7/85

ஸ்ரீலங்கா அரசு எந்தவொரு அரசியல் தீர்வுக்கும் இதுவரைவந்து சேரவுமில்லை. நாம் இன்னும் எதனையும் ஏற்றுக்கொள்ளவுமில்லை, இத்தீர்வுகள் எதுவும் தனிஅரசாக பிரிந்து செல்லும் உரிமையை எமக்குத் தரப்போவதில்லை, என்பதில் எமக்கு எதுவித சந்தேகமும் இல்லை, தமிழீழ மக்கள் தனியரசாக பிரிந்து போகும் சுயநிர்ணயஉரிமை பெறும்வரை அவர்கள் போராட்டம் முற்றுப்பெறமாட்டாது, என்பதை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் உறுதிப்படுத்துகின்றது.

19/7/85

மன்னாரில், திம்பு பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்களால் ஊர்வலங்கள் நடாத்தப்பட்டுள்ளது, மேலும் ஸ்ரீலங்கா அரசு இராணுவரீதியில் தன்னை பலப்படுத்திக் கொள்ள முழுமையாக செயற்படுவதுடன், தமிழ் மக்களை விடுதலைப்பாதையில் இருந்து திசைதிருப்பிக்கொள்ள திட்டங்களையும், சலுகைகளையும் அறிவித்து வருகின்றது என்ற சுலோகங்களும் மேற்படி ஊர்வலத்தில் காணப்பட்டுள்ளது.

தமிழ்த்தீவிரவாதிகளுக்கு உலகின் பல இடங்களில் வாழும் ஆறு கோடி தமிழர்களின் ஆதரவு உண்டென்றும், இத்தீவிரவாத இளைஞர்களை ஒரு கோடியே இருபத்தைந்துலட்சம் சிங்களவர்கள் எதிர்க்கின்றார்கள் என்றும், இப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு எவ்வளவு பணம் அவசியமோ அவ்வளவு பணத்தையும் கொடுக்கத் தயார் என ஸ்ரீலங்கா நிதியமைச்சர் றொனி டீ மெல் தெரிவித்துள்ளார்.

20/7/85

கிழக்கு மாகாணத்தில், கதிரவெளி அகதிகள் முகாமில் இருந்து 14வயது சிறுமியொருத்தி சிங்கள இராணுவத்தால் கடத்திச் செல்லப்பட்டு அருகில் உள்ள சிங்களவருக்குச் சொந்தமான ஓட்டுத்தொழிச்சாலை ஒன்றில் வைத்து மானபங்கப்படுத்தப்பட்டுள்ளார்.

வவுனியா பாவற்குளம்பகுதியில் உள்ள தமிழ்மக்கள் சிங்களகாடையர்களின் அச்சுறுத்தல்களினால் வெளியேறி காடுகளில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில் வசித்து வரும் தமிழ்மக்களை அப்புறப்படுத்தி சிங்களவர்களை குடியேற்றுவதில் ஸ்ரீலங்கா அரசு தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com


22/7/85
பருத்தித்துறை பொலிகண்டியில் ரோந்து வந்த சிங்கள இராணுவத்தினருக்கும் தமிழீழப்போராளிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் சிங்களஇராணுவ அதிகாரி உட்பட சிங்களஇராணுவத்தினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தின்பின் நடைபெற்ற முதல் மோதல் இதுவெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் சிலர்,சுவரொட்டிகள் ஒட்டிக்கொண்டிருந்த சமயம், ரோந்து வந்துகொண்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில், பஸ்சுக்காக காத்துநின்ற பொதுமக்கள், மூவர் கொல்லப் பட்டதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

23/7/85
தமிழர் பிரச்சனைக்கு தீர்வுகாணும் எந்தவித உடன்பாட்டிற்கும் மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டும் என புத்தபிக்குமார் இலங்கை அரசை எச்சரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

24/7/85
பூஸா இராணுவ முகாமிலிருந்து 21 தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். தமிழீழம் வந்து சேர்ந்துள்ள இவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

01 அப்பாப்பிள்ளை அருட்குமார்
02 பாலச்சந்திரன்
03 பாலசிங்கம் சந்திரகாசன்
04 பாலசுந்தரம் கார்த்திகேசு
05 தீபசுந்தரம் கந்தசாமி
06 தங்கராஜா புஷ்பராஜா
07 நவரத்தினம் கந்தசாமி
08 தங்கராஜா சாந்தகுமார்
09 பு. சபாநாதன்
10 சுப்பிரமணியம் லோகேந்திரன்
11 அந்தோனி யோகநாதன்
12 செல்லத்துரை நேசரத்தினம்
13 இராசநாயகம் புவனராஜா
14 தம்பிப்பிள்ளை ராஜகுருநாதன்
15 சின்னத்தம்பி புஷ்பராஜா
16 சக்திவேல் ஜெயபாலன்
17 அந்தோனிப்பிள்ளை சூசைதாசன்
18 சவாமுத்து மகாராஜகன்னன்
19 ராஜகுகதயாபரன் தங்கவேலு
20 பஞ்சரத்தினம் நேமச்சந்திரன்
21 அந்தோனிப்பிள்ளை தேவநாயகம்

26/7/85
1983ம் ஆண்டு வெலிக்கடைச்சிறையில் சிங்கள இராணுவத்தாலும், காடையராலும் கொல்லப்பட்ட தமிழீழப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அரச,தனியார் நிறுவனங்கள் , பாடசாலை, யாவும் மூடப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. மேலும் 53குண்டுகள் வெடிக்கப்பட்டுள்ளது.

"கறுப்பு யூலையினை நினைவு கூர்ந்து திருச்சியில் தமிழீழ மாணவர் பேரவையினால் மாபெரும் மௌனப் பேரணி ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. கூடவே பேரவையின் சுவிற்சலாந்து கிளையினரால் மாபெரும் நினைவஞ்சலிக்கூட்டமொன்றும் நடாத்தப்பட்டுள்ளது.

27/7/85
திருமலையில் உப்புவெளி பொலிஸ்நிலைய கான்டபிள் ராஜபக்சா சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து 10 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

30/7/85
ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, பின்பு விடுதலை செய்யப்பட்டு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் இராணுவமுகாமில் கையெழுத்திட்டு வந்த கிளிநொச்சியைச் சேர்ந்த இராதாகிருஷ்ணன் என்பவர், 22 வெட்டுக்காயங்களுடன் அவரது வீட்டுக்கு அருகில் இறந்து கிடக்கக்காணப்பட்டுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

## பார்வையாளர்களாக இருக்கும் நாம் பங்காளர்களாக மாறுவோம்.

அன்று ஆண்ட தமிழ் இனம் இன்று நிலை தளர்ந்து போயிருக்கின்றதே. ஏன் ? என்று ஒருவன் கேட்பானாயிருந்தால், அதற்கு ஒரே ஒரு பதில் இன்றைய சிங்களப் பேரினவாத ஆட்சி என்றே கூறலாம். ஆண்ட தமிழினம் அழிகின்றதே என ஒவ்வொரு தமிழனுடைய நெஞ்சமும் எரிமலையாகி, அந்த எரிமலையின் குமுறலே இன்றைய காலகட்டத்தில் உருவாகியுள்ள நிலை. தமிழ் மக்களை என்றும் அடிமைகள் ஆக்கி அவர்களை ஒழித்து சிங்கள மயமாக்குவதே, இன்று தர்மம் என்று கூறிக் கொண்டு, அதர்மம் செய்யும் ஜயவர்த்தன அரசின் நோக்கமாகும்.

இன்று தமிழீழத்தில் ஒவ்வொரு தமிழனுடைய நெஞ்சமும் அழுது கொண்டிருக்கின்றதே ஏன்? பிள்ளையை கொடிய ஆட்சியின் கூலிப்படைகள் கொன்று விட்டார்கள் என்று பெற்றோர்கள் அழுகின்றார்கள், படித்துக்கொண்டிருந்த தனது மகனை சிறையில் இட்டுக் கொடுமைப்படுத்துகின்றார்கள் என்று துடிக்கின்றார்கள், வேலைக்கு சென்ற தனது கணவனைக் கொன்று விட்டார்கள் என்று மனைவி அழுகின்றாள், அப்பா அம்மாவை கொன்றுவிட்டார்களே, நாம் இனி எப்படி உயிர் வாழ்வது? என்று பிள்ளைகள் துடிக்கின்றனர், இது மட்டுமா? கற்புக்கரசியாம் கண்ணகி பரம்பரையில் வாழ்ந்து வந்த தமிழ்ப் பெண்களின் கற்பையும் அல்லவா சூறையாடுகின்றார்கள். இப்படி ஒவ்வொரு தமிழனுடைய வீட்டிலும் அழுகுரல் கேட்கின்றதே, இறந்தவர்களை நினைத்து அழுவதா? அல்லது நாம் இறக்கப்போகின்றோமே என்பதை நினைத்து அழுவதா? தமிழ் மகளிரே! நாளுக்கு நாள் எமது தமிழினம் அழிகின்றதே என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மக்களால் மக்களுக்காக, அதாவது மக்களின் சுதந்திரத்திற்காக போராடுவது தான் சுதந்திரப் போராட்டம். குறிப்பிட்ட ஒரு பிரிவினர் மட்டும் போராடி சுதந்திரம் பெற்றுத் தந்த பின்பு, நாம் எல்லோரும் சென்று சுதந்திரமாக வாழ்க்கை நடாத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பது "முயற் கொம்பு" போன்றதே. நாம் எல்லோரும் ஆயுதம் ஏந்தித் தான் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. இன்றைய போராட்டத்தில் தம்மையே தியாகம் செய்து ஈடுபட்டுள்ளவர்களிற்கு எத்தனையோ தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன. அவற்றை எல்லாம் நாம் உணர்ந்து எமது கடமையைத் திறம்படச் செய்ய வேண்டும். உதாரணமாக, இன்று முக்கியமாகத் தேவைப்படுவது பண உதவி. இந்த உதவியைக் கூட எம்மில் சிலர் வழங்க முன்வருவதில்லை. எமது இளைஞர்கள் விடுதலைப் போராட்டத்திற்கு என்று பணம் கேட்க வரும் போது, ஏதோ அவர்களின் வீட்டுப் பிரச்சனைக்குப் பணம் கொடுப்பது போல எம்மில் சிலர் நடந்து கொள்கின்றோம். நாம் எல்லோரும் அந்நிய நாடுகளில் உல்லாசமாக வாழ்கின்றோமே, எதற்காகப் போராட்டத்திற்கு உதவி வழங்க வேண்டும் என்று மட்டும் நினைத்து விடாதீர்கள். அப்படி நினைத்திருந்தாலும், இனியாவது அதை மறந்து விடுங்கள். ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ளுங்கள். நாம் இன்று அந்நிய நாடுகளில் உல்லாசமாக இருக்கின்றோம், ஆனால் இன்னும் சில ஆண்டுகளில் எமது நிலை இரண்டு தோணிகளில் கால் வைத்தவன் போன்றதே. நாம் எமது தாம் நாட்டில் சுதந்திரமாக வாழ முடியாமல் அந்நிய நாடுகளில் இன்று வாழ்கிறோம். தாம் நாட்டில் சுதந்திரமாக வாழ முடியாமல் இருக்கும் நாம் அந்நிய நாடுகளில் எவ்வளவு காலம்? எப்படி? சுதந்திரமாக வாழ முடியும் என்பதை, மகளிரே சிந்தித்துப் பாருங்கள்.

படிப்பகம்

தொடர்ச்சி...6

www.padippakam.com

வழியில் நிற்கும் சில நாய்களிற்காக நாம் விலகி நிற்கலாம். ஆனால் எமது பாதையை மாற்றக் கூடாது. நாம் எல்லோரும் சுதந்திரமாக எமது தாய் நாட்டில் வாழ்வதற்கு எமக்கு சாதி மத பேதமற்ற சுதந்திர தமிழீழம் தான் வேண்டும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் எமது அடிமை விலங்கை உடைக்கப் புறப்படுவோம் பெண்ணினமே !

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"

"வெல்க தமிழீழம்"

தோழி. க. கலைமகள்செல்வி.


தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - மாதர் அணி. - பிரித்தானியக் கிளை.

*****************************************************************

சிலுவையில் துயிலுறும் சமுதாயச்
சிறைகளில் உறைந்தோம்
சீதனம், சீர்வரிசை,
சிறப்பாக எதிர் நோக்கும்
சிறுமதியர் சிந்தையில்,
சிறகிழந்தே நின்றோம்.

சியோனிஸ சிங்களம்,
சிதைத்தது நம் வாழ்வை,
சிறீலங்கா இராணுவம்
சீரழித்தது நம் கற்பை.

சிந்திப்பாய் தமிழ் மகளே,
சிறையுடைக்க இன்று,
சிருஷ்டிப்பாய் புதுவாழ்வை
தமிழீழமதை வென்று!



தமிழ் மகளிரே,

புரட்சிப் பாதையில் புத்தொளியூட்ட அணிதிரள்வீர்!

எமது ஒன்று திரண்ட ஆதரவின் மூலம், ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சியை வலுவடையச் செய்வோம். "அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்."

தொடர்புகளிற்கு: 01-472 2588 தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - மாதர் அணி பிரித்தானியக் கிளை.

வெளியீடு :- தமிழீழ தகவல் நடுவம், B M Box 1916, London WC1N 3XX.
படிப்பகம்